செ.வெ.எண். 58/நவம்பர் தேதி : 26.11.2016

## தருமபுரி மாவட்டம்

## தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 850 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மற்றும் 12,407 பயனாளிகளுக்கு ரூ. 61 கோடியே 84 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.





தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 850 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மற்றும் 12,407 பயனாளிகளுக்கு ரூ. 61 கோடியே 84 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் இன்று (26.11.2016) வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் உணவு பொருள் வழங்கல் துறையின் சார்பில் தருமபுரி வட்டத்திற்குட்பட்ட 458 பயனாளிகள் மற்றும் நல்லம்பள்ளி வட்டத்திற்குட்பட்ட 392 பயனாளிகள் என மொத்தம் 850 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 12407 பயனாளிகளுக்கு ரூ. 61.84 கோடி மதிப்பில் பயிர் கடன்களும் மற்றும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 446 பயனாளிகளுக்கு ரூ. 6.09 இலட்சம் மதிப்பில் பயன்களும் வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக ஆட்சி பொறுப்பேற்றவுடன் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து வேளாண் பெருமக்களின் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார்கள். 100 யூனிட் மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் வீடுகளுக்கு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றி தந்துள்ளார்கள். ஏழை பெண்களின் திருமணத்திற்கு திருமண நிதியுதவியுடன் திருமாங்கலியத்திற்கு 4 கிராம் தங்கத்தை 8 கிராம் ஆக உயர்த்தியுள்ளார்கள். நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கப்படும் மின்சாரத்தை 200 யூனிட்டுகள் எனவும், விசைத்தறிக்கு கட்டணமில்லாமல் வழங்கிய மின்சாரத்தை 750 யூனிட்டுகளாக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்துள்ளார்கள். மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அனைத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

இன்றைய தினம் தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி ஆகிய வட்டங்களுக்குட்பட்டவர்கள் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பங்களை பரிசீலனை செய்து 850 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 2016-17ம் ஆண்டிற்கு பயிர் கடன் குறியீடு ரூ. 115.20 கோடி மதிப்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 12407 பயனாளிகளுக்கு ரூ. 61.84 கோடி மதிப்பில் பயிர் கடன்களும் மற்றும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 446 பயனாளிகளுக்கு ரூ. 6.09 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் 1047 நியாய விலைக்கடைகள் இயங்குகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 15 ஆயிரத்தி 544 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் 8 ஆயிரத்து 309 டன் அரிசி பெறப்பட்டு நியாய விலைகடைகளின் மூலம் மக்களுக்கு

வழங்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் 53 ஆயிரத்தி 323 குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள 7 வட்டங்களிலும் புதன் கிழமை தோறும் வட்ட வழங்கல் அலுவலங்களில் சிறப்பு மனுக்கள் முகாம்கள் நடத்தப்பட்டு 2016 வரை 13,100 மனுக்கள் பெறப்பட்டு அன்றை தினமே தீர்வு காணப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து வட்டங்களிலும் ஒரு கிராமம் என்ற முறையில் 2-வது சனிக்கிழமைகளில் கிராமங்களுக்குச் சென்று குடும்ப அட்டைகளில் தேவையான மாற்றங்கள் செய்ய மனுக்கள் பெறப்பட்டு அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. மேலும் இதுவரை 5,244 மனுக்கள் பெறப்பட்டு உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் அம்மா திட்ட சிறப்பு முகாம்களில் மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக தீர்வு காணப்படுகிறது. பொதுமக்கள் அரசு நடத்தும் முகாம்களில் தங்களது கோரிக்கைகள் குறித்து மனு அளிக்கும்போது உரிய சான்றுகளை இணைத்து கொடுத்தால் சம்மந்தப்பட்ட மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

தமிழக அரசு அனைத்து மாவட்டங்களிலும் நியாய விலைக்கடை பணிகளைக் கணினி மயமாக்கும் திட்டத்தினை வடிவமைத்து ஒவ்வொரு நியாய விலைக்கடைக்கும் ஒரு கணினி செயலி (Point of sale Device) வழங்கப்பட்டுள்ளது. ரூ. 44 அயிரம் மதிப்பிலான கணினி செயலி (PSO) நமது மாவட்டத்தில் உள்ள 1,047 நியாய விலைக்கடைகளுக்கும் ரூ. 4.60 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் விடுதலின்றி சிந்தாமல் சிதறாமல் உணவுப்பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இக்கணினி செயலியின் பயனாக அங்காடியில் பொருட்கள் இருப்பு விவரம், அங்காடி திறக்கப்பட்டதா என்பது போன்ற விவரங்களை குடும்ப அட்டைதாரர்கள் அறியவும் வாங்கிய பொருள்களின் விவரங்களை தமது கைப்பேசி குறுஞ்செய்தியின் மூலம் தெரிந்துகொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் இடைவிடாது இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்களுக்கு மற்றும் மாவட்ட நிர்வாகத்தில் அனைத்து அலுவலர்களுடைய தொலைபேசி எண்கள், கைபேசி எண்கள் ஆகியவை செயலியில் உள்ளன. பொதுமக்கள் அவசர காலத்தில் இந்த செயலியை பயன்படுத்தி தங்களது பகுதிகளில் உள்ள குறைகளை அவசர கால உதவி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் கூட்டுறவு இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கி செல்வி. கி. ரேணுகா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. பி.என்.ஏ. கேசவன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் திரு. எம்.கே. வேலுமணி, மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கி இயக்குநர்கள் திரு. எம். பொன்னுவேல், திரு. ஏ.டி.எம்.கே. ரவி, திரு. தாமோதரன், திருமதி ஜோதி பழனிசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.